ஹளரத் சுல்தான் சையத் பாபாயே நத்ஹர், சர்மஸ்த் தப்லே ஆலம் தோல் சமந்தர், கலந்தர் ஹுசேனி, சுஹர்வர்த்தி அவர்களின்

வாழ்க்கை வரலாறு

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைத் திருப்பெயரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் கொடியில் மலர்ந்த நறுமலராகிய இத்தியார் (ரஹ்) அவர்கள், மதீன மாநகர் விட்டு தம் மாணவர் புடைசூழ உதுமானியப் பெரரசின் தலைமைப் பீடமாம் இஸ்தம்பூலை அடைந்த அவர்களுக்குப் பெரிதும் மரியாதை செய்து கௌரவித்தனர். அவர்களின் கரம் பிடித்துத் தீட்சை பெற்றவர்களோ எண்ணிலடங்காதவர்கள்.

அவர்களின் ஆற்றலையும் மாண்பினையும் கண்டு வியந்த சுல்தான் சில காலம் கழித்து அவர்களுக்க பஹனஸா என்னும் நகரையும் அதன் சூழலையும் மானியமாக வழங்கிக் கௌரவித்தார். அங்கு சென்று அவர்கள், அரச பரிபாலனம் ஏற்றுச் செங்கோல் செலுத்தி வருங்கால், அவர்களுக்கு ஆண் மகன் ஒன்று பிறந்தது. அதற்கு அஹ்மத் கபீர் என்னும் அழகுசால் திருப்பெயரிட்டுச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர்.

தந்தைக்குப் பின் பஹனஸாவின் அரியணை ஏறிய அஹ்மது கபீர் (ரஹ்) அவர்களுக்கு நாற்பதைந்து வயதான பொழுதும், மகப்பெறு வேண்டி உண்ணாத மருந்து ஒன்றுகூட இல்லை. செய்யாத அறம் பாக்கி இல்லை. எல்லாப் போற்றினையும் அவர்களுக்கு அளித்த இறைவன், மகப்பேற்றினை மட்டும் அவர்களுக்கு அளிக்க மறுத்தது ஏனோ என்று அவர்கள் மயங்கினார்கள், தியங்கினார்கள்.

இறுதியாக அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றிது. "இறைவன் என் அருமைப்பாட்டனாராம் முஹம்மது (ஸல்) அவர்களை நோக்கி, லவ்லாக லமா கலக்துல் அஃப்லாக் ('நீர் இல்லையெனின், நான் அண்ட கோளங்களையும் படைத்திரேன்') என்று அருள்மொழி பகர்ந்துள்ளானே. என் பாட்டனார் அவர்களும் "அனமின் நூருல்லாஹி வகுல்லு ஷைஇன் மின்நூரி" (நான் இறைவனின் பேரொளியிலிருந்து ஆனேன். அண்ட கோளங்களும் என் பேரொளியிலிருந்து ஆனவை)

என்று திருவாய் மலர்ந்துள்ளார்களே. அவ்வாறிருக்க நான் ஏன் மதீன மாநகர் சென்று என் பாட்டனாரின் அடக்கவிடத்தை அடைந்து, அவர்களிடமே என் குறையிரந்து அழுது கெஞ்சி மன்றாடக் கூடாது?" என்று தம்மையே தாம் வினவிக் கொண்டனர். அடுத்தகணம் அவர்கள் மதீனாப் பயணத்திற்காக ஆயத்தங்கள் செய்யத் துவங்கி விட்டனர்.

விரைவில் மதீன மாநகர் வந்தடைந்த அவர்கள், புனித ரௌலா ஷரீஃபின் முன் நின்று துக்கம் தொண்டையை அடைக்க, மௌன மொழிகளால் தம் மனக்குறையை எடுத்துரைத்து, கண்ணீரைத் தம் பாட்டனாரின் பாதாரவிந்தங்களில் காணிக்கையிாக வைத்தார்கள்.

அன்றிரவு வெள்ளிக்கிழமை இரவாக இருந்தது. அன்பர்க்கு அருள்பாலிக்கும் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், தம் அருமைப் பெயரரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, "அஹ்மது கபீர்! ஒன்றிற்கும் கவலற்க! இதனை உண்ணும். இறையருளால் உமக்கு ஓர் ஆண் மகவு பிறக்கும். அது இறைநேசச் செல்வர்களின் உயர் பதவியாகிய 'குத்பு' பதவியைப் பெற்று வாழும். அதில் எத்தனைச் சுளைகள் உள்ளனவோ அத்தனை சீர்களை அவர் பெற்றிருப்பார். அவர்களுக்கு 'விலாயத்' உடையவர்களாக விளங்குவர்" என்று திருவாய் மலர்ந்து, ஒரு மாதுளம் பழத்தை அவர்களிடம் கொடுத்தனர்.

அதனைப் பெற்ற அடுத்த கணமே மகப்பேறு எய்தப் பெற வேண்டுமென்ற ஆவலால் உந்தப் பெற்ற அவர்கள், அதனை உடைத்து அதிலிருந்து மாணிக்கம் நிகர் சுளைகளை எடுத்து நாவினிக்க, வயிறு இனிக்க, உளம் இனிக்க உண்டார்கள். ஆஹா! அதுபோன்ற ஒரு தீஞ்சுவைக் கனியை அவர்கள் தம் வாணாளில் உண்டதே இல்லை!!

ஹுஸைன் (ரலி) அவர்களின் வேறொரு கிளையில் தோன்றிய ஸையித் அலீ என்பவரின் அருமைத் திருமகளும், அஹ்மத் கபீர் (ரஹ்) அவர்களின் ஆருயிர்த் துணைவியுமாகிய ஃபத்ஹுன்னிஸா அம்மையார் சின்னாட்களில் கருவுற்றனர். அப்பொழுது அவர்களின் கனவில் அவர்களின் பாட்டனார் அலீ (ரலி) அவர்கள் தோன்றி, வலிமார்களின் கிரீடாதிபதியாக ஒரு குத்பு அவர்களின் மணி வயிற்றில்

கருவுற்றிருக்கும் நற்செய்தியை நவின்று, "ஃபத்ஹுன்னிஸாவே! உன் பாக்கியமே பாக்கியம்! உன் நற்பேறே நற்பேறு!!" என்று நன்மாராயம் மொழிந்துவிட்டு மறைந்தனர்.

இதன்பின் பத்துமாதங்கள் பறந்தோடின. ஹிஜ்ரி 347 ஆம் ஆண்டு துல்ஹஜ் திங்கள் இரண்டாம் நாள் (14.2.952) சனிக்கிழமை, ஃபத்ஹுன்னிஸா அம்மையார் ஓர் ஆண் மகனை ஈன்றெடுத்தனர். அரசருக்கு ஆண் மகவு பிறந்த செய்தி அறிந்து பஹனஸா நகரமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தது. அஹ்மது கபீர் (ரஹ்) அவர்களோ, இரண்டு 'ரக்அத்' நஃபில் தொழுகை தொழுது, இறை துதி பாடி இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

குழந்தை பிறந்து ஏழாம் நாள், பெற்றோர்கள் அவருக்கு முதஹ்ஹருத்தீன் என்னும் அழகுசால் திருப்பெயரிட்டு, அருமை பெருமையுடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர்.

முதஹ்ஹருத்தீன் (ரஹ்) அவர்களுக்கு ஏழு வயதான பொழுது, தந்தை அஹ்மது கபீர் (ரஹ்) அவர்கள் இறப்பெய்தவே, பஹனஸா நகர உறுதுணையாக ஸையித் அலீ என்பவரை நியமித்தனர்.

இதற்குப் பத்தாண்டுகளுக்குப்பின் ஸையித் அலீயும் உலகு நீக்கவே, முதஹ்ஹருத்தீன் (ரஹ்) அவர்களே, அரசாங்கத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று, ஸையித் அலீயின் இரு ஆண்மக்களான ஷம்சுத்தீன் என்பவரையும், ஷம்சுல்லாஹ் என்பவரையும் தம் அமைச்சர்களாகக் கொண்டு, செவ்வனே அரசு செலுத்தலாயினர். இவ்வாறு நான்கு ஆண்டுகள் உருண்டோடின.

முதஹ்ஹருத்தீன் (ரஹ்) அவர்களுக்கு இருபத்தொரு வயதான பொழுது, அவர்கள் கனவொன்று கண்டார்கள். அதில் ஒருவர் நரகத்தில் உழன்று கொண்டுள்ளது. வேதனை தாங்காது அவர் அலறிக்கொண்டுள்ளார். அது கண்டு அவர்மீது இரங்கிய இவர்கள், அவரை அணுகி, "நீ யார்? உனக்கு ஏன் இத்தனைத் துன்பம் தரப்படுகிறது? நீ யாது பிழை செய்தனை?" என்று பரிவுடன் வினவுகிறார்.

அதற்கு அவர், "அதை ஏன் நீர் கேட்கிறீர்? நான் உலகில் இழைந்த அநீதங்களுக்கும், நுகர்ந்த அதீதமான இன்பங்களுக்கும் நான் இங்குப் பட்டுத் தொலைக்கிறேன்" என்று கூறினார்.

"அப்படியா! அப்படி நீ என்ன அநீதம் இழைத்தாய்? அதீதமான இன்ப நுகர்ந்தாய்?" என்று வினவுகிறார்கள் அவர்கள்.

அதற்கு அவர், "நான் உலகில் இழைத்த அநீதங்கள், ஆற்றிய அநியாயங்கள் ஒன்றா, இரண்டா? எதனைக் கூறுவது? எதனை மறைப்பது? நான் சாமான்யனல்லன். மணிக்கால் அமளி அமர்ந்து மாமாநிலம் புரந்தவன். செங்கோல் செலுத்துவதற்குப் பதிலாக கொடுங்கோல் தாங்கிய கொடியவன். அதன் பலனை நான் இன்று நுகர்ந்து கொண்டிருக்கிறேன்" என்று கண்ணீர் சிந்தக் கூறிகிறார்.

இதன்பின் மற்றொரு காட்சி துவங்குகிறது. அவர்களின் முன் ஒய்யாரப் பூங்கா ஒன்று தோன்றுகிறது. அதில், வண்ண வண்ண மலர்கள் பூத்துச் சொரிந்து கிடக்கின்றன. அதனூடே வீசும் மென்காற்று நறு மணத்தை நாலா திசைகளிலும் அள்ளித் தெளித்துக் கொண்டுள்ளது.

அப்பூங்காவின் நடுவே நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மணி மண்டபம் ஒன்று காட்சி வழங்குகிறது. அதனுள்ளே நுழைகிறார்கள் அவர்கள். அங்கே அருளே உருவெடுத்தாற் போன்ற பெரியார் ஒருவர் அமர்ந்து, இறைவனைத் துதித்துக் கொண்டிருக்கிறார். அவரின் அருகே போய் அவர்கள் நின்றது, அவரின் தியானம் கலைகிறது. திரும்பிப் பார்க்கிறார் வந்தவரை.

"பெரியீர்! தாங்கள் யார்? தாங்கள் எதன் காரணமாக இத்துணைப் பேரின்ப நிலையை எய்தப் பெற்றுள்ளீர்கள்? தாங்கள் உலகில் வாழ் வாங்கு வாழ்ந்த வகை தான் யாது?" என்று அவர்கள் அவரைப் பணி வோடும், பண்போடும் வினவுகிறார்கள்.

அதற்கு அவர், 'நான் ஒரு பக்கீர். பஞ்சப் பராரியாகப் பாரிலே வாழ்ந்தேன். என் உணவுக்காக உழைக்கும் நேரம்போக, எஞ்சிய நேரத்தை இறைத் தியானத்திலும், நற்செயல்கள் ஆற்றுவதிலும்

கழிந்தேன். அதன் காரணமாக இறைவன் எனக்கு இத்தகு பேரின்பப் பெரு வாழ்வை வழங்கினான்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார். இத்துடன் கனவு கலைகிறது.

இக்கனவைக் கண்டதிலிருந்து முதஹ்ஹருத்துன் (றஹ்) அவர்களின் மனம் ஒரு நிலைக் கொள்ளவில்லை. எப்பொழுது பார்த்தாலும், அவர்களுக்கு அக்கனவு பற்றி நினைவாகவே இருந்தது. அரச வாழ்க்கையே கசந்துவிட்டது அவர்களுக்கு. நாளுக்கு நாள் அந்தக் கசப்புணர்வு அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. அதனைத் தம் இதயத்தில் மூடிவைக்க, வைக்க, அதன் உந்துதல் தாங்க இயலாது, இதயமே வெடித்துவிடும்போல் இருந்தது.

எனவே ஒரு நாள் அவர்கள் தம் இளவலையும், அமைச்சர் இரு வரையும் ஒருங்கழைத்து, தாம் கண்ட கனவை விண்டு "இவ்வுலகமும், அதிலுள்ள பொருள்களும், இன்பங்களும் அழியக் கூடியவையேயாகும். இந்த உலக இன்பங்களைத் தேடுபவன் நாயென்றும், மறு உலக இன்பங்களையே வேட்கை கொள்பவள் பெண் என்றும், இறைவனைத் தேடுபவனே ஆண்பிள்ளை சிங்கம் என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர். எனவே நான், அரசு துறந்து, இறைவழியில் என்னை அழைத்துச் செல்லும் ஒரு காமிலான ஷைகைத் தேடிப் புறப்படத் தீர்மானித்து விட்டேன். எனக்குபின், என் இளவல் இந்நாட்டின் அரியணை ஏறி அரசு செய்வார்" என்று கூறினார்.

அதுகேட்டு மூவரும் அதிர்ச்சியுற்றார்கள். இளவல் மகிழ்ச்சியுறுவதற்கு மாறாகத் தேம்பித்தேம்பி அழலானார். அவருடைய கன்னங்களில் கண்ணீர் வாய்க்கால் வகுத்து வழிந்தோடியது.

"தம்பி! அழாதே! நாம் இருவரும் நம் தந்தை விட்டுச் சென்ற இப்பேரரசுக்கு சமபங்காளிகள் ஆவோம். நான் உனக்கு முன் பிறந்ததன் காரணமாக, சரிநிகர் சமானமான பங்காளர்களில் முதல்வனாக உள்ளேனேயன்றி வேறில்லை. நான் நம் தந்தைக்கு மூத்தோன் என்ற முறையில், இப்பேரரசைப் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி செய்தேன். இளையோனாகிய நீயும் எனக்குப்பின் இதனைச் சில ஆண்டுகள் ஆட்சி செய்வதே முறைமை" என்று அவர்கள் தம் தம்பிக்கு ஆறுதல் கூறினார்கள். எனினும், அவர் ஆறுதல் அடைந்தாரில்லை.

இதன் பின் அவர்கள் தம் அன்னையை அணுகி, " அம்மா என் உயிரினும் இனிய தாயே!! தாங்கள் என்னைத் தங்களின் மணி வயிற்றில் பத்துமாதங்கள் சுமந்து பெற்று, அதன்பின் தங்களின் மார்பகத்தில் சுரந்த தங்களின் இரத்தத்தின் திரிபாகிய பாலை எனக்கு ஊட்டி வளர்த்தீர்கள். அந்தப் பாலுக்கான கடமையைப் பாவியேன், இன்னும் சரிவர ஆற்ற வில்லை. அதற்குள் எனக்கு இவ்வுலக வாழ்வே கசந்து விட்டது. எனவே, தாங்கள் எனக்கு அளித்த அந்தப் பாலை எனக்கு அறம் செய்து விட்டதாகக் கூறி என்னை ஆசீர்வதித்து, அல்லாஹ்வின் பாதையில் அனுப்பிவையுங்கள்" என்று பணிவுடன் கூறுகின்றனர்.

அவர்களின் இப்பணிவான சொல். அன்னையின் ஈரலைக் கருகச்செய்தது. ஏங்கித் திகைத்து விம்மினார். வெய்துயிர்த்து அழுதார். "என் மகனே! என் ஆருயிர் மகனே! உன்னை நான் என்ன தவம் செய்து பெற்றேனடா. என்னுடைய தள்ளாத வயதில் என்னைவிட்டுப் பிரிய உன் மனம் எவ்வாறு ஒப்பியதடா. உன் வாய்ச் சொல் என் உள்ளத்தில் 'சுரீர்' எனத்தைத்து இரத்தத்தைப் பீறிட்டு வெளி வரச்செய்து விட்டதே. என் கண்ணின், மணிக்குள் மணியாக வைத்து உன்னைக் காத்தேனே! என் கண்ணின் மணியாகிய, என் உயிராகிய, என் உயிருக்கு உயிராகிய உன்னைப் பிரிந்து நான் எவ்வாறு இவ்வுலகில் வாழ்வேனடா" என்று கூறி அரற்றினார் அவர்.

அதன்பின் சற்று ஆறுதல் பெற்ற அவர், "நீ அல்லாஹ்வின் பாதையில் செல்ல நாடியிருப்பதால், அதனைத் தடுப்பது முறைமையன்று. நீ பாலுண்ட கடமையை இன்னும் சரிவர ஆற்றவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். அதனை நான் உனக்கு அறம் செய்து விட்டேன்" என்று மட்டும் கூறினார். அதற்குமேல் 'சென்று வா' என்று கூற அவரின் நாவிற்கு சக்தியில்லை.

அன்னையின் ஆன்மீக அனுமதி பெற்றபின், அரசு மாற்றத்திற்காக அலுவல்கள் மடமடவென்று செய்யப்பட்டன. முடிசூட்டு விழா நாளும் நெருங்கியது. ஆனால், மக்களிடையே தான் மகிழ்ச்சி காணவில்லை அது எங்கோ போய் ஒளிந்து கொண்டது.

அத்தாணி மன்றம், சுல்தான் சையிது முதஹ்ஹறுத்தீன் (ரஹ்) அவர்கள் தம் கொலு மீது வீற்றிருந்து பின்வரும் உரையை நிகழ்த்தினார்கள்:

"அமைச்சர் பெருமக்களே! அருமை மக்களே!! நான் தங்களுக்குத் தலைமை தாங்கிப் பணியாற்றும் பேற்றினைப் பதினைந்து ஆண்டுகளாகப் பெற்றிருந்தேன். எனக்கு அப்பணியில் உறுதுணையாக என் இரு அமைச்சர்களும், என் இளவலும் இருந்து வந்தார்கள் என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். நான் இப்பொழுது முடி துறந்து என் பின்னவருக்கு முடி சூட்டுகிறேன். அவர் பிறப்பால் எனக்குப் பின்னவரேயானாலும், அறிவால் எனக்குப் பின்னவரல்லர். அவர் வயதால் எனக்கு இளையவராயினும், ஆற்றலால் எனக்கு இளைத்தவரல்லர். எனவே நீங்கள் எவ்வாறு எனக்கு விசுவாசமாயிருந்தீர்களோ, அதே போன்று அவர் மீது விசுவாசம் செலுத்தி, அவர் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து ஒழுகுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உரையாற்றி முடிந்தபின், தம் இளவலை அழைத்து வந்து கொலுவில் இருத்தி, அவரின் இளம் தலைமீது முடிசூட்டினார்கள் அவர்கள். அப்பொழுது மக்களின் முகத்தில் ஈயாடவில்லை.

முடிசூட்டுவிழா முடிவுற்ற பின்னர் துறவிகளின் கம்பளி ஆடை தரித்து அரண்மனையிலிருந்து வெளியேறினார்கள் முதஹ்ஹறுத்தீன் (ரஹ்) அவர்கள். தம் அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாமன்னர் பக்கீர் கோலம்பூண்டு, பஞ்சைப் பராரி போன்று காடேகுவதைக் கண்டு மக்களின் கண்கள் குளமாயின. துன்பத்தைத் தாள இயலாது, அவர்கள் சிறு குழந்தைகள் போன்று விக்கி விக்கி அழுதார்கள். அவர்களின் கால்களில் வீழ்ந்து தம் கண்ணீரைக் காணிக்கையாக்கி, அவர்களைப் போகவிடாது தடுத்தார்கள். எனினும் அவர்கள் கேட்கவில்லை. "என்முடிவு முடிவானது. அன்பு கூர்ந்து நான் செல்ல அனுமதியுங்கள். இறைவன் நாடினால் நான் மீண்டும் வந்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று ஆறுதல் கூறினார்கள் அவர்கள். அவர்களின் இந்த ஆறுதல் மொழி மக்களின் அவலத்தைச் சிறிது ஆற்றியது.

ஷைகு அலீ (ரஹ்) அவர்களின் தாளடியில் சில காலம் வீற்றிருந்து, பல்வேறு ஞான இரகசியங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்து,

எனினும், பலர் அதுகேட்டு ஆறுதல் பெறவில்லை. "தங்களுக்குப் பின் எங்களுக்கு இங்கு ஒரு வாழ்வா? நாங்களும் தங்களுடன் வருகிறோம். தாங்கள் எங்குச் செல்லினும், நாங்கள் தங்களை நிழல் போன்று தொடர்ந்து வருவோம்" என்று கூறிக் கொண்டு தொள்ளாயிரம் பேர் அவர்களுடன் சேர்ந்து நடை போட்டார்கள், அவர்களின், இரு அமைச்சர்களான ஷம்சுத்தீன் என்ற ஷம்ஸ கோயானும், ஷம்சுல்லாஹ் என்ற ஷம்ஸ் பர்ரானும் இருந்தனர்.

காடும் மலையும் வனமும் வனாந்தரகளும் கடந்து, கல்லிலும் முள்ளிலும் அவர்கள் நடந்து சென்றார்கள். கால் கடுக்க, கால் நோவ அவர்கள் நடந்து சென்றார்கள். எங்குச் செல்கின்றோம், எதற்காகச் செல்கின்றோம் என்று அறியா நிலையில், அவர்கள் கால் போன திரையில் நடந்து சென்றார்கள். கல் உராய்ந்தும், முள் பாய்ந்தும் அவர்களின் கால்கள் குருதி சிந்தின. ஆனால் முஹ்ஹறுத்தீன் (ரஹ்) அவர்களின், கால்கள் மட்டும் குருதி சிந்தவில்லை; அவர்களின் உள்ளமும் காமிலான ஷைகை எங்கும் காண்போம் என்று ஏங்கித்தவித்து, குருதி சிந்திக் கொண்டிருந்தது.

இக்காலை அவர்கள் கானகத்தின் நடுவே ஓரிடத்தில் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது, அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருக்காட்சி வழங்கி, "கவலற்க! நாளை நாம் கிள்ரை உம்மிடம் அனுப்பி வைப்போம். அவர் உமக்குக் காமிலான ஷைகைக் காட்டியருள்வார்" என்று அமுதவாய் விண்டு மறைந்தனர்.

அவ்விதமே பொழுது விடிந்தது. பசுமை ஆடை உடுத்திய அழகுத் திருமுகத்தார் ஒருவர், அவர்களின் முன்வந்து அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து நின்றார். அதற்குப் பதில் கூறிய அவர்கள், "தாங்கள் யார்? வந்த அலுவல் யாதோ?" என்று வினவினர்.

அதற்கு அவர், "நான் கிள்ர் ஆவேன். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆணையின்படி, நான் உம்மை ஒரு காமிலான ஷைகிடம் அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளேன். அவர் பெயர் ஷைகு அலீ என்பதாகும். அவர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழி வந்தவர்.

அவர் இக்காலத்து 'குத்பு' ஆக விளங்குகிறார். அவர் ஹுர்முஸ் நகரில் வாழ்கிறார்" என்று கூறினர்.

இதன்பின் அவர்களை அழைத்துக் கொண்டு, ஹுர்முஸ் நகர் நோக்கிச் சென்றார்கள் கிள்ர் (அலை). இறுதியாக அவர்கள், ஹுர்முஸ் நகர்வந்து சேர்ந்தனர். வீதிகளெல்லாம் கடந்து ஷைகு அலீ (ரலி) அவர்களின் தவமடத்தின் தலைவாசலில் வந்து நின்ற கிள்ரு (அலை), முதஹ்ஹருத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, "இதுவே உம்முடைய குருநாதரின் தவமடம் ஆகும். இதுவரை உம்மை அழைத்துச் சென்று விடுமாறே அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், எனக்கு அருட் கட்டளையிட்டுள்ளார்கள். ஆதலின் நீர் உள்ளே செல்லும். நான் சென்று வருகிறேன்" என்று கூறி விடை பெற்றுச் சென்றனர்.

இப்பொழுது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், ஷைகு அலீ (ரஹ்) அவர்களின் கனவிலும் திருத்தோற்றம் வழங்கி, "உம்மிடம் நம் திருப்பேரர் முதஹ்ஹருத்தீனை அனுப்பி வைத்துள்ளோம். அவர் உம் தலை வாசலில் வந்து நின்று கொண்டிருக்கிறார். அவரை உள்ளே அழைத்து வந்து தீட்சை நல்கும்" என்று அமுதவாய் விண்டு மறைந்தனர்.

திடுக்குற்று விழித்தெழுந்த ஷைகு அலீ (ரஹ்) அவர்கள் ஓடோடிச் சென்று தம் தவமடத்தின் கதவைத்திறந்த பொழுது, அருளே உருவாய் அமைந்த இளவல் ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களே அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட நல்லார் என அறிந்து, அவர்களை ஆரத்தழுவி "முதஹ்ஹருத்தீன்! உம் வரவு நல்வரவாகுக!! உம் மனத்திடத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நீர் இங்கு வந்த நோக்கத்தையும் நான் அறிவேன். உம்மீது இறையருள் பொழியுமாக!" என்று வாழ்த்துரை வழங்கினார்கள். ஷைகு அலீ (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெற நாடி "எவர் வரினும் அவர்கள் முதலில் கூறுவது, போய் அந்தக் கொதி நீர்க் கொப்பரையில் குதித்து மூழ்கிக் குளித்து உடல் தூய்மை பெற்றுவாரும். பின்னர் அகத்தூய்மை, ஆன்மீகத் தூய்மை பெற்றுக் கொள்ளலாம்" என்பதாகவே இருந்தது.

அகத்தூய்மை, ஆன்முகத்தூய்மை பெறுவது ஒருபுறம் இருக்கட்டும்.

அந்தக்கொதி நீரில் குளித்து, உடல் தூய்மை பெறும்முன் உயிர் போயிவிடுமே என்று அஞ்சி சொல்லாமல் கொல்லாமல் சென்று விடுபவர் பலர். துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, அந்தக் கொதிநீர் கொப்பரையை நோக்கிச் செல்லும், சிலர் அதனை நெருங்கியதும், அவர்களின் துணிச்சல் அவர்களின் காலை வாரிவிட்டு ஓடிவிட்டதன் காரணமாகப் பலரின் நகைப்புக்கிலக்காகி முகமிழந்து, திரும்பிச் சென்று வந்தார்கள். என்னதான் நேரிடினும் சரியே, செத்தாலும், பிழைத்தாலும் சரியே, என்று எண்ணி, அந்தக்கொதி நீரிக் கொப்பரையில் குதித்துக் குளித்து உடல் தூய்மை பெற்று வந்தவர்களுக்கு. ஷைகு அலீ (ரஹ்) அவர்கள் தம் அன்புக் கரம் நீட்டி தீட்சையளித்து வந்தார்கள். அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கே அன்றி வேறு எவருக்கும் இத்தகு நற்பேறு கிடைக்காதிருந்தது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆசியுடன் தம்மிடம் தீட்சை பெறுவதற்காக வந்திருக்கும் இளவல் முதஹ்ஹருத்தீன் (ரஹ்) இத்தகு சோதனையென்ன, இதைவிட ஆயிரம் மடங்கு கடினமான வேறு எத்தகு சோதனையாயினும், அதில் நிச்சயம் வெற்றிபெறுவார்கள் என்பதை நன்குணர்த்த ஷைகு அலீ (ரஹ்) அவர்கள் அடுத்த நாள் வியாழக்கிழமை முதஹ்ஹருத்தீன் (ரஹ்) அவர்கள் வைகறையில் தொழுதுவிட்டுத் தம் முன் வந்தமர்ந்ததும் அவர்களை நோக்கி, 'அதோ கொதித்துக் கொண்டிருக்கும் கொப்பரையில் மூழ்கிக் குளித்து உடல் தூய்மை பெற்று வாரும்; அதன்பின் அகத்தூய்மை, ஆன்மீகத் தூய்மை பெறுவதற்கான வழி வகைகள் செய்வோம்" என்று கூறினார்.

ஷைகு அலீ (ரஹ்) அவர்களின் திருவாயிலிருந்து இச்சொற்கள் வெளிவந்ததுதான் தாமதம். அடுத்த கணம் " யா அலீ!" என்று கூறியவண்ணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்தக் கொப்பரையில் போய்க் குதித்தார்கள் அவர்கள். எவ்வாறு நம்ரூதினின் நெருப்புக் குண்டம், இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு மிதமான குளிர்ச்சியுள்ள பூங்காவாக மாறியதோ, அதே போன்று அவர்கள், அக்கொதி நீரில் குதித்ததும், அது அவர்களுக்கு மிதமான குளிர்நீராக மாறியது. அதில் மூழ்கிக் குளித்து, உடல் தூய்மை பெற்று வெளி வந்தார்கள் அவர்கள்.

சாதனையை வென்று புடம்போட்ட பொன்னே போன்று, தம்முன் வந்தமர்ந்த முதஹ்ஹருத்துன் (ரஹ்) அவர்களைப் புன்முறுவல் பூத்த முகத்தினராய் வரவேற்ற ஷைகு அலீ (ரஹ்) அவர்கள், அன்னாரின் கரம் பிடித்துத் தீட்சை நல்கி, அவர்களைத் தம் ஞானப் பாட்டையில் இணைத்து, அவர்களுக்கு 'நத்ஹர்' என்ற பெயரையும் சூட்டினார்கள். இதிலிருந்து அவர்களின் பெயர் 'நத்ஹர் நத்ஹர்' என்று எங்கணும் முழங்கலாயிற்று.

வேறு எந்த ஷைகும் செய்யாத நூதனமான சோதனையைத் தம்மிடம் தீட்சை வேண்டி வருபர்கள் மீது ஷைகு அலீ (ரஹ்) அவர்கள் சுமந்துவந்தும், அதில் வாகைசூடி வெளிவருபர்களுக்கு மட்டும் அவர்கள் தீட்சை வழங்குவதும், அங்கிருந்த பலருக்கு வியப்பையளித்தது. அச்சோதனையில் நத்ஹர் (ரஹ்) அர்வளால் எவ்வாறு வெற்றி பெற இயன்றது என்பதும் அவர்களுக்கு விளங்காத புதிராக இருந்தது. இதுபற்றி அவர்கள் ஷைகு அலீ (ரஹ்) அவர்களிடம் வினயமாக வினவி விளக்கம் வேண்டினர்.

அப்பொழுது ஷைகு அலீ (ரஹ்) அவர்கள் தம் தாளடியில் வீற்றிருந்த நத்ஹர் (ரஹ்) அவர்களை நோக்கி, அதற்கான விளக்கத்தை எடுத்துரைக்குமாறு கூறினர். உடனே அவர்கள், "இறைவனின் நல்லடியார்களின் உள்ளத்தில் இறைகாதல் என்ற வெந்தழல் எப்பொழுதும் தகித்துக் கொண்டுள்ளது. அதன் உக்கிரத்தைக் கண்டு நகரம் கூட நடுங்கும். அத்தகு காதல் நெருப்பை தன்னுடைய அமானிதமாக ஏற்றுக் கொள்ளுமாறு வானம், பூமி, சுவனம், நரகம், ஜின், வானவர் ஆகிய அடங்கலிடமும் இறைவன் கூறினான். ஆனால் அந்த அமானிதத்தின் சுமையைத் தங்களால தாங்க இயலாது என்று அனைத்தும் ஒருமித்துக் கூறிவிட்டன. மனிதனே அந்த அமானிதத்தை எற்றுக்கொள்ள முன் வந்தான். இஷ்கெ இலாஹி' என்ற இறைக் காதல் தீ, எவனுடைய உள்ளத்தில் தகித்துக் கொண்டிருக்கின்றதோ, அவன் அந்தக் கொதிக்கும் நீரிலென்ன, தீக்குழம்பில் குதித்து மூழ்கினாலும், அத்தீக் குழம்பு அதனை எதிர்த்து நிற்க இயலாது குளிர்ந்து விடும்" என்று கூறி முடித்தனர். அதுகேட்டு ஆங்கு வீற்றிருந்தவர்களின் வியப்பு முன்னிலும் பன்மடங்கு அதிகமாகியது.

ஷைகு அலீ (ரஹ்) அவர்களின் தாளடியில் சில காலம் வீற்றிருந்து, பல்வேறு ஞான இரகசியங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்து, மெய்ஞ்ஞான சொருபராய் விளங்கிய நத்ஹர் (ரஹ்) அவர்கள், பின்னர் தம் ஆசானின் அனுமதியைப் பெற்றுத் தம் சீடர்களான தொள்ளாயிரம் கலந்தர்களுடன், மக்கா சென்று 'ஹஜ்ஜ' செய்து பின்னர் மதீனா சென்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்தனர். அங்கேயே ஓராண்டு காலம் தங்கியிருந்து, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாவத்தையும் ஸலாமையும் அல்லும் பகலும் சொரிந்து கொண்டிருந்தார்கள்.

இக்காலை நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை அவர்களின் சீடர் ஐயூப் கலந்தர் இதோ கூறுகின்றார், நாமும் கேட்போம்:

"ஒரு நள்ளிரவில் நானும், நத்ஹர் (ரஹ்) அவர்களும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புனித ரௌலா ஷரீஃபின் முன் நின்று அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறிக் கொண்டிருந்தோம். அப்பொழுது திடீரென நத்ஹர் (ரஹ்) அவர்களைக் காணவில்லை. அப்பொழுது எனக்கேற்பட்ட திகைப்பிற்கும் திடுக்கத்திற்கும் அளவில்லை. பின்னர் சற்று நேரம் கழித்துத் திடீரென அவர்கள் என் அருகே முன்போல் நின்று ஸலவாத்தும் ஸலாமும் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களை வியப்புக் கண்களுடன் நோக்கி, "தாங்கள் இதுவரை எங்கு சென்றிருந்தீர்கள்?" என்று வினவினேன். அதற்கு அவர்கள், "நான் இங்கு நின்று 'அலம் நஷ்ரஹ்' சூராவை ஓதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்முன் திருத்தோற்றம் வழங்கி, என்னை ஆரத்தழுவித் தங்களின் ரௌலா ஷரீஃபுக்குள் அழைத்துச் சென்று, தங்களின் உமிழ் நீரை என் வாயில் சொரிந்து, 'இன்று முதல் நீர் குத்புகளுக்கெல்லாம் குத்பாவீர். உம்முடைய உமிழ்நீர் எவர் வாயில் படுகின்றதோ அவர் 'விலாயத்' எய்தப் பெறுவார்" என்று நன்மாராயம் மொழிந்தார்கள் என்று இயம்பினார்."

இந்நிகழ்ச்சிக்குப் பின் நத்ஹர் (ரஹ்) அவர்களின் தகுதி நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. ஒரு வெள்ளிக்கிழமை ஜும் ஆ தொழுது

முடிந்ததும், நத்ஹர் (ரஹ்) அவர்கள் மேடை மீதேறி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அத்திருச் சபையில் அஸீஸுல்லாஹ் (ரஹ்), ஜைனுத்தீன் மிஸ்ரீ (ரஹ்), அப்துல் மஜீத் (ரஹ்) யூனுஸ் (ரஹ்), மஹ்மூத் கர்க்கி (ரஹ்) ஆகிய வலிமார்களும், இன்னும் சிரியா நாட்டைச் சேர்ந்த மற்றொரு வலியும் வீற்றிருந்தனர்.

அப்பொழுது நத்ஹர் (ரஹ்) அவர்கள் திடீரென உணர்ச்சி மீக்குற்றவர்களாய், " என் தகுதி மிகவும் மாண்புடைத்ததாகும். நான் இக்காலத்து குத்புமார்களுக்கெல்லாம் கிரீடாதிபதியாக உள்ளேன். எத்தனையோ 'வலி' மார்கள் என்னுடைய ஆன்மீக ஆட்சியின் கீழ் உள்ளனர்" என்று கூறினர்.

அக்காலை ஆங்கு வீற்றிருந்த ஆறு வலிமார்களுமே ஒருங்கு சேர்ந்து "நத்ஹரே! நிறுத்தும் உம் பேச்சை. நாங்களும் எங்களுடைய தகுதியை உணர்வோம். உம்முடைய தகுதிக்கு எங்களுடைய தகுதி எவ்வகையிலும் இளைத்ததல்ல. வேண்டுமாயின் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அறைகூவல் விடுத்தனர்.

உடனே நத்ஹர் (ரஹ்) அவர்கள், தங்களின் கம்பிளிக் போர்வையைத் தம்மீதும் அவர்கள்மீதும் போர்த்த, அவர்கள் அனைவரும் தன்னுணர்வற்றார்கள். அவர்களின் கண்களுக்கு ஆலமெ நாஸுத், ஆலமே மலக்கூத், ஆலமே ஜபரூத், ஆலமெ லாஹுத் ஆகியவை தென்பட்டன. இப்பொழுது நத்ஹர் (ரஹ்) அவர்கள், அவர்களை நோக்கி, "நீங்கள் இப்பொழுது உங்களுடைய படியத்தரங்களைத் காட்டுங்கள், பார்ப்போம்" என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கூறியதும், அந்த வலிமார்கள், தங்களின் 'விலாயத்'தைக் கொண்டு பறந்தார்கள். ஜைனுத்தீன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களும் மஹ்மூத் கர்க்கி (ரஹ்) அவர்களும், முந்திய மகாமாகிய ஆலமெநாசூத்தை எய்தினர். அதற்குமேல் அவர்களால் பறக்க இயலவில்லை. அஸீஸுல்லாஹ் (ரஹ்) அவர்களும் யூனுஸ் (ரஹ்) அவர்களும் அதற்கு அடுத்த மகாமாகிய ஆலமெ மலக்கூத்தை அடைந்தனர். அதற்கப்பால் ஓர் அங்குலம் கூட அவர்களால் நகர

இயலவில்லை. நத்ஹர் (ரலி) அவர்களின் ஆன்மீக மாணவராகிய ஜஹீருத்தீன் கலந்தர் (ரஹ்). அவர்கள் அதற்கு அடுத்த மகாமாகிய ஆலமெ ஜபரூத்தை அடைந்தார்கள். அதற்கப்பால் செல்ல அவர்களால் இயலவில்லை. ஆனால் நத்ஹர் (ரஹ்) அவர்களோ, இவற்றிக்கெல்லாம் மிகமிகத் தொலைவிலுள்ள ஆலமெ லாஹூத்தை அடைந்து. அதற்கப்பால் உள்ள இறையண்மையை எய்தி நின்றனர்.

சற்று நேரம் கழித்து நத்ஹர் (ரஹ்) அவர்கள், அவர்கள் அனைவர் மீதிருந்தும் தம் போர்வையை எடுத்தனர். அடுத்த கணம் அவர்கள் அனைவரும் தன்னிலை எய்தப் பெற்றார்கள். ஆனால் நத்ஹர் (ரஹ்) அவர்கள் மட்டும், இறைக்காதலில் மூழ்கித் தன்னுணர்வற்றிருந்தார்கள். அவர்களின் மட்டும், இறைக்காதலில் மூழ்கித் தன்னுணர்வற்றிருந்தார்கள். அவர்களின் முகம் பேரொளி மயமாய் இலங்கியது. அவர்களின் நாவிலிருந்து 'அனல் ஹக்' என்ற சொற்கள் எழுபத்திரண்டு தடவைவெளிவந்ததன. இதன்பின் மூன்று நாட்கள் கழித்தே அவர்கள் தன்னுணர்வு எய்தப் பெற்றார்கள்.

இதன் பின்னரே, அந்த ஆறு வலிமார்களும் அவர்களின் மாண்பினை உணர்ந்து, தங்களின் தவற்றை மன்னித்தருளுமாறு அவர்களின் தாள் பிடித்து வேண்டினர். நத்ஹர் (ரஹ்) அவர்களும் பெறு மனத்துடன் அவ்விதமே செய்தார்கள்.

இக்காலை ஸமீலான் நாட்டினரான அப்துர் ரஹ்மான் என்பர் தமக்கு ஒரு ஞான குருவைக் காட்டியருளுமாறு இறைஞ்சிவிட்டுத் துயிலுற, "மதீனா சென்று அங்கு, வந்து தங்கியிருக்கும் நத்ஹர் (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெறுமாறு கனவின் மூலம் அறிவிக்கப்பட்டது. அவ்விதமே அவர் மதீனா வந்து நத்ஹர் (ரஹ்) அவர்களிசை சந்தித்துத் தாம் கண்ட கனவைக் கூற, அவர்கள் அவருக்குத் தீட்சை வழங்கித் தம்முடன் வந்திருக்கும் பக்கீர்களுக்குப் பணிவிடை செய்து வருமாறு பணித்தார்கள்.

மதீனா வந்து ஓராண்டாகியும், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து யாதோர் உத்தரவும் வராதது கண்டு, மனம் சோர்ந்து

(ரஹ்) அவ்ரகள் ஓரிரவு படுத்துறங்குங்கால், அவர்களின் கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "சையித் நத்ஹரே! நீர் உம்முடன் வந்திருக்கும் பக்கீர்களுடன், ஹிந்துஸ்தான் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யும். உம்மால் பல்லோர் நேர்வழி பெறுவர். உம்மிடம் கிள்ரு அடிக்கடி வந்து கொண்டிருப்பார்" என்று அருள்வாய் மலர்ந்தவிட்டு மறைந்தனர்.

திடுக்கிட்டு விழித்தெழுந்த நத்ஹர் (ரஹ்) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள் ஆணையைத் தம் சீடர்களிடம் கூற, அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை.

விரைவில் பயணம் துவங்கியது. மலைகளையும், பாலைகளையும் கடந்து, அவர்கள் ஜித்தா துறைமுகம் வந்து சேர்ந்தார்கள். துறைமுகத்தில் ஏராளமான கப்பல்களை கிடந்த போதிலும், அவற்றிற்குக் கூலி கொடுத்து அவற்றில்

ஏற அவர்களின் கையில் காசில்லை. எனவே என் செய்வனெ அறியாது அவர்கள் திகைத்து நின்றார்கள். அப்பொழுது நத்ஹர் (ரஹ்) அவர்கள் தம் சீடர்களை நோக்கி, 'ஒன்றிற்கும் கவலற்க! எவர் நம்மை இங்கு அனுப்பி வைத்தார்களோ, அவர்களே நம்மை ஏற்றிச் செல்லக் கப்பலையும் அனுப்பி வைப்பார்கள்" என்று கூறினர்.

அவர்கள் இவ்வாறு கூறிச் சில நிமிடங்களே ஆயின. ஒரு கப்பல் கரை நோக்கி ஓடி வந்தது. அது கரையை அடைந்ததும், அதன் மீகாமன் கரையில் 'குழுமி நின்ற பக்கீர்களை நோக்கி, "ஏறிக் கொள்ளுங்கள்" என்று கூறினர். கப்பல் தென்திசை நோக்கி ஓடியது. நாற்பது நாள் பயணத்திற்குப் பின் அது ஒரு கரையை அடைந்து நங்கூரமிட்டது. கப்பலில் இருந்தோர் நலமே கரை இறங்கினர்.

பின்னர் அங்கிருந்து கிளம்பி நத்ஹர் (ரஹ்) அவர்களும், தொள்ளாயிரம் பக்கீர்களும் தரை மார்க்கமாக நடந்து வரும் பொழுது, அவர்களைப் பூத கணங்கள் எதிர்த்து நின்றன. அவற்றை அவர்கள் தம் தவ வலிமையால் வென்று வாகை சூடித் திரிசிபுரம் (திருச்சிராப்பள்ளி) வந்து, அங்கிருந்த மலை (மலைக்கோட்டை) மீதேறி இளைப்பாறினர்.

அங்கு அவர்கள் தங்கியிருந்த சில நாட்களில், ஆற்றாது ஓடிய பூத கணங்கள் திரும்பி வந்து, ஆற்றிய விஷமச் செயல்கள் சிறிதல்ல. எனினும் அவற்றையெல்லாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, அங்கேயே அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

ஒரு வைகறையில் நத்ஹர் (ரஹ்) அவர்கள் தொழுது விட்டுத் தனித்து ஓரிடத்தில் அமர்ந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னே பெரும் கற்பாறை ஒன்று சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தது. அவர்களைக் கொன்றொழிப்பதற்கு இதுதான் ஏற்றதருணம் என்று கருதிய பூத கணங்கள், அதனை அவர்கள் மீது சாய்த்து விட்டன. இதனை உள்ளுணர்வால் உணர்ந்த அவர்கள் அக்கணமே எழுந்து நின்று தம் கையால் அதனை வீழாது தாங்கினார். இதை இன்றும் திருச்சி மலைக்கோட்டையில் காணலாம்.

பூத கணங்களின் இந்த அடாச் செயலைக் கண்டு அடங்காச் சினமுற்ற அவர்கள் அவற்றை ஏறிட்டுப் பார்க்க, அவை அனைத்தும் அவ்விடத்திலேயே எரிந்து சாம்பலாயின.

ஒரு நாள் காவேரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நகரையே மூழ்கடித்து விடுமோ என்று ஐயுறும் வண்ணம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகப்பட்டுக் கொண்டு வந்தது. மக்கள் கதிகலங்கி மலை மீதிருந்த நத்ஹர் (ரஹ்) அவர்களிடம் வந்து, தங்களின் அவலம் எடுத்துரைத்து அபயம் தேடினார்கள். அப்பொழுது நத்ஹர் (ரஹ்) அவர்கள், தம்மைச் சந்திக்க வந்த கிள்ரு (அலை) அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

உடனே அவர்கள் தம் கையிலிருந்த கழியால் மலை மீது ஓங்கி ஓரி அடி அடித்தனர். அது நகரமெங்கணும் பேரொலியாக எதிரொலி செய்தது. அடுத்த கணம் சீறிப்பாய்ந்து வந்த காவேரிப் பெருவெள்ளம், அஞ்சி நடுங்கி வடியலாயிற்று. மக்கள் உயிர் பிழைத்தார்கள். அவர்களின் உடைமைகள் வெள்ளத்திற்கு இரையாகா வண்ணம் காப்பாற்றப்பட்டன. இது கண்டு பெரிதும் மகிழ்வுற்ற கிள்ரு (அலை) அவர்கள், நத்ஹர் (ரஹ்) அவர்களுக்கு 'தப்லெ ஆலம்' (அகில உலகப் பறை) என்று புகழ்ப்பெயர் சூட்டி "இன்று முதல் தங்களின் பெயர் 'தப்லெ ஆலம்' என்று உலகமெங்கணும் முழங்குமாக!" என்று வாழ்த்தியருளினார்கள்.

"இப்பெயருக்கு நான் எவ்வாறு உரியவனானேன்" என்று நத்ஹர் அவர்கள் தாழ்மையுடன் கிள்ரு (அலை) அவர்களிடம் வினவ, "தாங்கள் கழியால் மலையை ஓங்கியடித்ததும், ஒரு பேரொலி முழங்கியதல்லவா? அப்பேரொலி கேட்டு காவேரி நதி அஞ்சி ஒடுங்கிப் பின்வாங்கி வெருண்டோடியது. அதன் காரணமாக மக்களும் மாக்களும் தப்பினர் அல்லவா?" என்று பதில் மொழிந்தனர் கிள்ர (அலை)

திரிசிரபுரம் வந்த ஐந்தாண்டுகள் உருண்டோடி விட்டன. முஸ்லிம்கள் மலைமீது வந்து தங்கி பாங்கு சொல்வதும், இறைவனைத் தொழுது இறைஞ்சுவதும், மாடுகளை அறுத்துச் சமைத்து உண்பதும், அதைச் சுற்றி வாழ்ந்து வந்த மக்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணின. எனவே ஒரு நாள் அவர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து நத்ஹர் (ரஹ்) அவர்களிடம் வந்து "நாங்கள் இவ்வூரில் பன்னூறு ஆண்டுகளாக ஒரு தொழு உருவத்தை வைத்து வணங்கி வருகிறோம். அது இருக்கும் இடத்திற்கு, ஒரு காதத் தொலைவரை நாங்கள் எவரையும் மாடு அறுக்க அனுமதியோம். தாங்கள் இங்கு வீற்றிருந்து, எங்களின் கோட்பாட்டிற்கு மாற்றமாக நடந்து கொள்வதால், தாங்கள் இவ்விடத்தை விட்டும் பெயர்ந்து வேறு எங்காவது சென்று விடவேண்டும்" என்று கூறினர்.

"நாங்களோ வேற்று நாட்டினர். நீங்கள் எங்களுக்க ஓரிடத்தைக் காட்டுங்கள். நாங்கள் அங்கு போய் வாழ்கிறோம்" என்று அமைதியுடன் பதில் கூறினர் நத்ஹர் (ரஹ்) அவர்கள்.

அப்பொழுது குழுத்தலைவன் அவர்களை நோக்கி, தாங்கள் தங்களின் கையிலுள்ள சக்கரைத்தைக் சுழற்றி வீசி எறியுங்கள். அது எங்குபோய் விழுகின்றதோ அவ்விடத்தை நாங்கள் உங்களுக்குத் தந்து விடுகின்றோம்" என்று கூறினான்.

"நல்லது; எந்தப் பக்கத்தில் அதனை எறியச் சொல்கிறீர்கள்?" என்று வினவினர் நத்ஹர் (ரஹ்) அவர்கள்.

அதற்கு அவன், "தென் பக்கல் நாங்கள் வழிபாடு நிகழ்த்தும் தெய்வம் கோயில் கொண்ட புனித இடம் உள்ளது. ஆதலின் தாங்கள் தங்களின் சக்கரத்தை வட பக்கல் வீதி எறியுங்கள்" என்று கூறினான்.

அதுவோ, திடீரெனத் தென்பக்கல் திரும்பி, அவ்வூர் மக்கள் வழிபாடு நிகழ்த்தும் தெய்வத்தின் தலையிலே போய் விழுந்து அதனைத் தலைவேற் முண்டம் வேறாக ஆக்கிவிட்டது.

மறுவார்த்தை பேச வழியின்றி அவ்வூர் மக்கள் அக்கோயிலைக் காலி செய்து கொடுத்தார்கள். நத்ஹர் (ரஹ்) அவர்களும், அவர்களின் பக்கீர் குழுவினரும் மலையிலிருந்து கீழே இறங்கி வந்து அவ்விடத்தைத் துப்புரவு செய்து அதனைத் தங்களின் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார்கள்.

இக்காலை ஹஜ்ஜு செய்யத் தம் குடும்பத்தினருடம் மக்கா வந்த அவர்களின் இளவலும், ஆங்கு வந்த பக்கீர் ஒருவரிடம் தம் தமையனாரின் இருப்பிடத்தைக் கேட்டறிந்து, திரிசிரபுரம் வந்த சேர்ந்தார். பல்லாண்டுகளுக்குப் பின் உடன் பிறந்தார்கள் இருவரும் சந்தித்துக் கொண்டது, பாலொடு பழம் சேர்ந்தாற் போன்று இனிமை நிமிபியிதாக இருந்தது.

சின்னாட்கள் தமயனாருடன் தங்கி இருந்தபின், ஒருநாள் தமயனாரைத் தனியே அணுகி, மீண்டும் பஹனஸா திரும்பிச் செங்கோலை கையிலே தாங்குமாறு பெரிதும் வேண்டிக் கொண்டார் இளவல்.

அதற்கு அவர்கள் "கமண்டலம் ஏந்திய கைக்குச் செங்கோல் எதற்கு? நீயே அதனைக் கையிலே தாங்கிச் சீரிய முறையில் ஆட்சி செய்து வா. நான் இங்கு அகிலத்திற்கோர் அருட்கொடையாக வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருட் கட்டளையின் மீது வந்தேனேயன்றி, வேறில்லை, எனவே நான் மீண்டும் அங்கு வருவேன் என்று நீ கனவிலும் கருத வேண்டாம். எனினும் எனக்கு ஒரு விருப்பம் உள்ளது. அதனை நீ நிறைவேற்றித் தந்தால், நான் பெரிதும் மகிழ்ச்சியுறுவேன்" என்று கூறினார்.

அது கேட்ட இளவல் பதற்றத்துடன், "என்ன அண்ணே இவ்வாறு கூறுகின்றீர்கள்? தங்களின் விருப்பமே என்னுடைய விருப்பமாகும். ஆணையிடுங்கள். அடுத்த கணம் அதனை ஆற்றி முடிக்கிறேன்" என்று அளவு உணவு உண்டே அவர்கள் நோன்பு திறக்கவும் செய்தார்கள்.

கூறினார்..

அப்பொழுது அவர்கள், 'தம்பீ! உன் அருமைத் திருமகள் சுல்தான் பீவியை என் ஆன்மீக மாணவர் அப்துர் ரஹ்மான் சித்தீக்கிக்குத் திருமணம் முடித்து மகிழ விரும்புகிறேன். அவரின் அன்னை அபூபக்கர் (ரலி) அவர்களின் வழி வந்தவர். தந்தையோ ஹுஸைன் (ரலி) அவர்களின் வழித் தோன்றல்" என்றனர்.

இச்செய்தி இளவலுக்குப் பெரும் மகிழ்வை அளித்தது. உடனே திருமணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருமணமும் எளிய, இனிய முறையில் நிறைவுற்றது.

நத்ஹர் (ரஹ்) அவர்களின் புகழ் நாளுக்கு நாள் நாடெங்கினும் பரவிவந்தது. அது அரசரின் செவிக்கும் எட்டியது. அவனோ அறுபது வயதை எய்தியும் மகப்பேறின்றி, பெரிதும் வருந்திக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் அரசியுடன், நத்ஹர் (ரஹ்) அவர்களின் திருமுன் வந்து, தம் மனக்குறையை அவர்களிடம் எடுத்துரைத்தான். அவர்கள் அவனுக்காக வேண்டி இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சினார்கள்.

இதன் பின் அரசி கருவுற்றாள். பத்து மாதம் சென்ற பின், அவள் ஒரே சூலில் இரண்டு மக்களை ஈன்றெடுத்தாள். ஒரு அழகே உருவாய் அமைந்தாற்போன்ற ஆண், மற்றொன்று தசைக் கட்டியென்று கூறத்தக்க பெண். அதற்குக் கைகளும் இல்லை; கால்களும் இல்லை.

தனக்குப் பின் அரியணை ஏற ஆண் மகவு பிறந்தது அறிந்த அரசன், அதற்குப் பின் ஒரு மாமிச பிண்டமே பிறந்த பொழுது, அதை வைத்து கொண்டு யாது செய்வதென அறியாது தவித்தான். அது பற்றி அவன் தன் அமைச்சர் பெருமக்களுடன் ஆலோசனை கலந்தபொழுது, எவர்கள் தங்களுக்கு மகப்பேறுண்டாகக் காரணமாக இருந்தார்களோ, அவர்களிடமே அதனை ஒப்படைத்து விடுங்கள்" என்று கூறினர்.

அவ்விதமே அந்தத் தசைக்கட்டியை எடுத்துக் கொண்டு வந்து, நத்ஹர் (ரஹ்) அவர்களின் திருமுன் வைத்ததும், அவர்கள் தண்ணீரில் யாதோ ஓதி அதன் மீது தெளித்தார்கள். உடனே வித்திலிருந்து முளைகள் என்று கூறி ஓர் எலுமிச்சம் பழ அளவு உணவுண்டு, நோன்பு நோற்றனர். அதே

கிளம்புவது போன்று எல்லா உறுப்புகளும், அதற்கு உண்டாகி, அது ஓர் அழகிய பெண் குழந்தையாக உருப்பெற்றது.

அதைக் கண்ட அரசன் பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் எய்தி, நத்ஹர் (ரஹ்) அவர்களை நோக்கி, "அது தசைக்கட்டியாய் இருந்தமையின், அதனைத் தங்களிடமே திருப்பித் கொணர்ந்தேன். அது இப்போது எழிலாரும் பெண் மகவாக ஆனது கண்டு, அதனை வளர்க்க எனக்கு ஆசையாக உள்ளது. நான் அதனை அரண்மனை எடுத்துச் செல்லவா?" என்று வினவினான்.

"உம் விருப்பம் போல் செய்க!" என்று கூறினார்கள் அவர்கள். அரண்மனை மீண்டதும், இதுகாறும் தம் பிஞ்சு இதழ் விரித்துச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த அப் பெண் மகவு மீண்டும் மாமிச பிண்டமாகியது. அது கண்டு பெரிதும் கவலையும், ஏமாற்றமும் அடைந்த அரசன் அந்த மாமிசப் பிண்டத்தைத் தூக்கிக் கொண்டு, மீண்டும் நத்ஹர் (ரஹ்) அவர்களிடம் வர, அவர்கள் அதன் மீது தண்ணீர் ஓதித் தெளிக்க அது மீண்டும் பெண் உருவாகியது. அதனை எடுத்துக் கொண்டு, அரசன் அரண்மனை மீண்டதும் மீண்டும் அது மாமிசப் பிண்டமாகியது. இவ்வாறு பல தடவைகள் நிகழ்ந்தன.

அது கண்டு அலுத்துச் சலித்துப் போன அவன், அந்தத் தசை கட்டியை நத்ஹர் (ரஹ்) அவர்களிடமே ஒப்படைத்து விட,அவர்கள் அதனை அழகிய பெண் உருவாக்கி, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வளர்ப்புத் தாய் ஹலீமாவின் திருப்பெயரை அதற்குச் சூட்டி அன்புடன் அதனை வளர்த்து வந்தார்கள். சில பொழுது அவர்கள் அதனை ரஹீமா என்றும் அழைத்து வந்தார்கள்.

ஓர் இரவு மின்மினிப் பூச்சி ஒன்று அக்குழந்தையைச் சுற்றி வட்டமிட, அதன் அழகில் வயப்பட்ட அக்குழந்தை அதனைப் பிடிக்க முயன்றது. இயலவில்லை. குழந்தை அழுதது.

அப்பொழுது நத்ஹர் (ரஹ்) அவர்கள் அக்குழந்தையை நோக்கி, "ஹலீமா! ஏன் அழுகிறாய்?" என்று வினவினர்.

'மின்மினிப் பூச்சியைப் பிடிக்க முயன்றேன்.. அது மின்னென்ன மறைந்துவிட்டது' என்று கூறியது குழந்தை.

உடனே ஒரு மின்மினிப் பூச்சியைப் பிடித்து அதனை ஹலீமாவிடம் கொடுத்தனர் அவர்கள்.

'ஒன்று பற்றாது இன்னும் வேண்டும்' என்றது குழந்தை.

மற்றொன்றையும் பிடித்துக் கொடுத்தார்கள் அவர்கள்.

"இன்னும் வேண்டும்" என்று குழந்தை அடம் பிடித்து அழ, அவர்கள் மின்மினிப் பூச்சியின் கூட்டத்தையே வரவைத்து குழந்தையைச் சுற்றி வருமாறு செய்தார்கள். குழந்தை மகிழ்ந்தது. இவ்வாறு ஒவ்வோர் இரவும் நிகழ்ந்தது. இதன் காரணமாக அக்குழந்தையை "மாமா ஜிக்னி" என்று செல்லப் பெயர் கொண்டு அழைத்தார்கள் மக்கள். ஜிக்னி என்றால் பார்ஸி மொழியில் மின் மினிப்பூச்சி என்று பொருளாகும்.

இதன்பின் பதினெட்டு ஆண்டுகள் உருண்டோடின. அரசன் இறக்க, அவனின் மகன் அரியணை ஏறினான். அரியணை ஏறு முன், நத்ஹூர் (ரஹ்) அவ்ரகளின் திருமுன் வந்து, அவர்களின் வாழ்த்தைப் பெற்றான். பின்னர் தம் உடன் பிறந்தாளைத் தம் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டினான். அவ்வாறே அவர்கள் அனுமதி வழங்கினார்கள்.

மாமாஜிக்னி தன் உடன் பிறந்தானின் முடி சூட்டு விழாவில் கலந்து கொண்டு, தவமடம் திரும்ப விரும்பிய பொழுது, அவளின் உடன் பிறந்தான் அவளுக்குப் பொன்னையும் மணியையும் வாரி வழங்கினான். ஆனால் அவளோ, "நான் ஒரு துறவி. என்க்கு பொன்னும் மண்ணும் ஒன்றேயாகும்" என்று கூறி அவற்றை எற்றுக் கொள்ள மறுத்தாள்.

எனினும் உடன் பிறந்தான் பெரிதும் வற்புறுத்தியதன் பேரில், "நீ விரும்பின், நீ வளர்த்து வரும் பஞ்சவர்ணக் கிளியைத் தா. எடுத்துச் செல்கிறேன்" என்று அவன் கூற, அவன் ஓடோடிச் சென்று கூண்டோடு அதனை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

அதனை எடுத்துக் கொண்டு தவமடம் மீண்டாள் மாமா ஜிக்னி. நத்ஹூர் (ரஹ்) அவர்கள், அந்தக் கிளி மீது பெரிதும் அன்பு செலுத்தினார்கள். அதற்கு திருக்குர் ஆனின் திருவசனங்களைக் கற்றுக் கொடுக்கவும் செய்தார்கள். அது அவற்றைத் திரும்பக் கூறியது அனைவர் செவியிலும்

தேனென இனித்தது.

இதன்பின் சில காலம் சென்று, சீஸ்தான் நாட்டு அரசர் பாபா பக்ருத்தீன் துறவு பூண்டு திருச்சி வந்தார். அவரை நத்ஹர் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீகக் குழுவில் இணைத்து ஆசீர்வதித்தார்கள்.

தங்களின் முடிவு நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த நத்ஹர் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 417 ரமலான் பிறை ஒன்பதாம் இரவு தராவீஹ் தொழுத பின் தங்களின் சீடர்களை ஒருங்கழைத்து, "என் முடிவு நெருங்கி விட்டது. ரமலான் பிறை 14ல் வெள்ளிக்கிழமை நான் இவ்வுலகு நீக்கப்போகிறேன். அது கண்டு நீங்கள் துக்கப்படவோ, துயரப்படவோ கூடாது. மன்னரேயாயினும், பக்கீரேயாயினும், நபியேயாயினும், வலியேயாயினும், மனிதரேயாயனும், ஜின்னேயாயினும், அனைவரும் இறப்பு என்னும் பானத்தை அருந்தியே தீர வேண்டும். ஆதலின் நீங்கள் உலக மாயையில் மூழ்காது, இறைக்காதலில் மூழ்கித் திளையுங்கள். அதுவே உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்பேறு நல்க வல்லதாகும். நீங்கள் தொழவும், நோன்பு நோற்கவும், இறைவனைத் தியானிக்கவும் தவற வேண்டாம். இரவில் விழித்திருந்து இறைத் தியானத்தில் ஈடுபடுங்கள்.அதுவே உங்களை இறைவனளவில் கொண்டு போய்ச் சேர்க்கும் பாலமாகும்." என்று கூறினர்.

பின்னர் அவர்கள் தம் கலீபாக்களை நோக்கி, "நான் உங்களுக்கு ஓர் இரகசியத்தைத் தெரியப்படுத்த விரும்பிகிறேன். ஓரிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'ஹிரா' மலையில் படுத்துறங்கும் பொழுது வானவர் கோன் ஜிப்ரீல் தோன்றி 'ஓதுக!' என்று கூற 'எனக்கு ஓதத் தெரியாதே" என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அவர்களை ஜிப்ரீல் கட்டித் தழுவி, மீண்டும் ஓதுக என்று கூற, "நான் ஓதினவனல்லனே" என்று விடையிறுத்தார்கள் அண்ணல். மறுமொழி பகர்த்தார்கள். மீண்டும் அவர் அவர்களை இறுக அணைத்து, "அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுக! அவனே உதிரக்கட்டியால் மனிதனை உற்பத்தி செய்தான்" என்று தொடங்கும் சூராவை ஓதினர். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அது பதிந்து. அவர்கள் அதனைத் திரும்பவும் ஓதினர். இவ்வாறு நெஞ்சோடு நெஞ்சு அணைத்து உணர்த்தப்பட்ட ஞானம், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அலீ (ரலி) அவர்கள் வழியாக,

குத்புமார்கள், வலி மார்கள் ஆகியோர்களுக்க வந்து, வாழையடி வாழையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

"ஞானவழித் தொடரை தஹபிய்யா (பொன் வழித்தொடர்) என்றும், பில்லியா (வெள்ளி வழித்தொடர்) என்றும் இருவகையாக பிரிப்பர். நம்முடைய ஞான வழித்தொடர் தஹபிய்யாவாகும். இது அலீ (ரலி) அவர்களிடமிருந்து ஹுஸைன் (ரலி) அவர்கள் வழியாக வருவதால், இதனை ஹுஸைனிய்யா என்றும் கூறுவர். பில்லியா என்பது அலீ (ரலி) அவர்களிடமிருந்து ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் வழியாக வருவதாகும். ஹஸன் பஸரு (ரஹ்) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழித்தோன்றல் அல்லாததால் அது பில்லியா (வெள்ளி வழித்தொடர்) என்று கூறப்படும்.

" எனக்கு பின் உங்களின் தலைவராக அப்துர் ரஹ்மான் சித்துகியை ஆக்கிக் கொள்ளுங்கள். அவரின் தந்தை வழி என்னுடைய தந்தை வழியோடு சேருகிறது. நாங்கள் இருவரும் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழித்தோன்றலாவோம்.மேலும் அவர் என் இளவலின் மகளை மணமுத்த மருகராவார். எனவே, எனக்குப்பின் நீங்கள் அவரை என்னிடத்தில் அமர்த்தி, சங்கை செய்யுங்கள்" என்று கூறி, இன்னும் எத்தனை, எத்தனையோ செய்திகளையெல்லாம் அவர்கள் எடுத்தோதினர்.

இதற்குள் ஸஹர் நேரம்வந்து விடவே, அவர்கள் நோன்பு நோற்க, ரொட்டியும், தண்ணீரும் கொண்டு வருமாறு கூறினார்கள். அவர்காளல் எழுந்திருக்கக் கூட இயலவில்லை. அத்துணைப் பலவீனமாக அவர்கள் இருந்தனர். அது கண்ட அவர்களின் சீடர்கள், நோன்பு நோற்க வேண்டாமென்றும், அதற்குப் பரிகாரம் செய்து விடலாம் அல்லது உடல் நடம் ஏற்பட்ட பின் விட்ட நோன்புகளைக் 'களா' வாகப் பின்னர் நோற்று கொள்ளலாம்" என்றும் கூறினர்.

அதற்கு அவர்கள் "என் வாணாளில் நான் ஒரு நோன்பு கூட நோற்கத் தவறியதில்லை. அவ்விதமிருக்க இறைவனுக்கு நான் ஆற்ற வேண்டிய கடமையை, என்னுடைய வாழ்நாளில் ஐந்தே ஐந்து நாட்களே மீதமுள்ள போது எவ்வாறு தவறுவிடுவேன். நோன்பு நோற்ற நிலையிலேயே என் உயிர். என் உடலை விட்டுப் பிரிந்தால், நான் பெரிதும் மகிழ்வுறுவேன்"

என்று கூறி ஓர் எலுமிச்சம் பழ அளவு உணவுண்டு, நோன்பு நோற்றனர். அதே அளவு உணவு உண்டே அவர்கள் நோன்பு திறக்கவும் செய்தார்கள்.

ஐந்து நாட்கள் ஓடின. ரமலான் மாதம் பதினான்காம் நாள். வெள்ளி இரவு (28 அக்டோபர் 1026) இஷாத் தொழுகை நேரம், அவர்கள் தம் சீடர்களை நோக்கி, "என்னுடைய பயணத்திற்கான நேரம் வந்து விட்டது. நான் என்னுடைய எசமானனை சந்திக்கச் செல்கிறேன். என் வாணாள் முடிவுற்றது" என்று கூறித் தம் தொழுகை விரிப்பைக் கொண்டு வருமாறு கூறி, தக்பீர் கட்டி 'கியாம்' நிலையில் நின்று பின்னர் 'ருகூஉ' செய்து அதன்பின் தங்களின் நெற்றியை சுஜூதில் கொண்டு போய்த் தரையில் வைத்தார்கள். அக்கணமே அவர்களின் உயிர், அவர்களின் உடலை விட்டும் பிரிந்து. (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.)

பிற்காலத்தில் அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிக்க வந்த ஷாஹூல் ஹமீது பாதுஷா நாயகம், அவர்களின் அடக்க அறைக்குள் புகுந்து, மூன்று நாட்கள் தங்கியிருந்து, அவர்களின் அனுமதிபெற்றுத் தென்னாட்டில் தீன்சுடர்கொளுத்தி நாகூரில் தரிபட்டனர்.

அவர்களின் அடக்கவிடத்திற்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருந்த காஜா அஹ்மதுல்லாஹ் ஷாஹ் (ரஹ்) அவர்கள், பின்னர் அவர்களின் ஆணையின் படி நகருக்கு வெளியில் உள்ள மலைக்குச் சென்று, அதிலிருந்து அம்மலைக்கு அவர்களின் பெயரால் காஜாமலை எனப்பெயர் ஏற்பபட்டது. அப்பெரியாரின் அடக்கவிடமும் அங்கேயே உள்ளது.

நத்ஹர் (ரஹ்) அவர்களின் கலீபா அப்துர் ரஹ்மான் சித்தீக் (ரஹ்) அவர்களும், வளர்ப்பு மகள் ஹலீமா என்ற மாமா ஜிக்னியும், நத்ஹர் (ரஹ்) அவர்களின் கால்மாட்டிலும், அவர்களின் அமைச்சர்களின் ஒருவரான ஷம்ஸ் கோயான், அவர்களின் பக்கத்தில் கீழ்ப்புறத்திலும் மற்றொரு அமைச்சரான ஷம்ஸ் பீரான் இப்பொழுது ஷம்ஸ் பீரான் தெரு என்று அழைக்கப்படும் தெருவிலுள்ள பள்ளிவாயலின் பக்கத்திலும், அடங்கப் பெற்றுள்ளார்கள்.

நத்ஹர் (ரஹ்) அவர்களின் கலீபாவும், மருகருமான அப்துர் ரஹ்மான் சித்தீக் (ரஹ்) அவர்களின் வழித்தோன்றல்களே ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாக நத்ஹர் (ரஹ்) அர்களின், தர்காவின் நிர்வாகிகளாகவும், ஊழியர்களாகவும் இருந்து பணியாற்றி வருகின்றனர்.